ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சனாதிபதி சுற்றறிக்கை இல: SP/PCMD/04/16
2016 செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி

சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள்
சகல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள்
சகல மாவட்டச் செயலாளர்கள்,
சகல பிரதேசச் செயலாளர்களுக்கும்

**ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடாத்துவதற்கான திகதியினை நிர்ணயிக்கும்போது ஏற்படும் அசௌகரியங்களைக் குறைத்துக்கொள்ளுதல்**

தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு இணைவாக மாவட்ட மட்டங்களிலும் மற்றும் பிரதேச மட்டங்களிலும் அரச மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்புச் செய்தல், செயற்படுத்துதல் மற்றும் தொடராய்வு செய்தல், மாவட்ட மற்றும பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் பொறுப்பாகும் என்பதோடு, மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைமைத்துவத்தை பலர் வகிப்பதுடன், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்காக அனைத்து நபர்களினதும் இணக்கப்பாட்டுக்கமைவாக, திகதியொன்றை ஒதுக்கும்போது அரசியல் அதிகாரமுடையவர்கள்,அரச அலுவலர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதோடு, அவ்வாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை முறையானவகையில் நடத்தமுடியாமல் இருப்பதாகவும் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையைக் குறைப்பதற்காக, மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடாத்துவதற்காக குறிப்பிட்ட திகதியொன்று குறிப்பிடப்படுவதுடன், ஒவ்வொரு மாதமும் இரண்டாவது திங்கட்கிழமையில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், ஒவ்வொரு மாதமும் நான்காவது திங்கட்கிழமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிமேதகு சனாதிபதி அவர்களின் பணிப்புக்கமைய இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலும், இரண்டாவது திங்கட்கிழமை அரச விடுமுறை தினமாகவிருப்பின், முதலாவது திங்கட்கிழமையிலும், நான்காவது திங்கட்கிழமை அரச விடுமுறை தினமாகவிருப்பின் மூன்றாவது திங்கட்கிழமையிலும் உரிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கும், எவரேனும் இணைத் தலைவர், இணைத் தலைமைத்துவம் வகிக்கும் குழுக்களின் எண்ணிக்கை (02) இரண்டுக்குமேல் இருப்பின் ஏனைய இணைத் தலைவர்களுடன் கலந்துரையாடி பொருத்தமான நாளொன்றினை ஒதுக்கிக்கொள்ளுதல், உரிய இணைத் தலைவரின் பொறுப்பாகுமென அதிமேதகு சனாதிபதி அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம்வரையிலான மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கான இணைப்பு-1 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடாத்துவதங்காக இணைப்பு-11 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிளை ஒதுக்கிக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மேலும் அறியத்தருகின்றேன்.

அதற்கமைய, ஒருங்கிணைப்புக் குழுவினால் எதிர்பார்க்கப்படும் பணிப்பொறுப்புக்களை குறைவின்றி நிறைவேற்றுவதற்காக தாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என்பதே அதிமேதகு சனாதிபதி அவர்களின் எதிர்பார்ப்பாகும் என மேலும் தெரவிக்க விரும்புகின்றேன்.

**பி.பீ.அபேகோன்**
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள்: செயலாளர்,
தேசியக் கொள்கைள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு - தகவலுக்காகவும்
- அவசிய நடவடிக்கைக்காகவும்

செயலாளர்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு - தகவலுக்காக

ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax ++ 94 11 2446657
ඊ-තැපැල / மின்-அஞ்சல் / e-mail prsec@presidentsoffice.lk